# அன்னையர் தினம்!

அன்னையர் தினமென்று
அன்னையை மறந்துவிடலாம்!
தந்தையர் தினமென்று
தந்தையை மறந்து விடலாம்!
பிள்ளையர் தினமென்று,

பெற்றோரும் மறந்திட்டால், பிள்ளைகள்
பெரும்பேறாய் வளர்வதென்னாளோ?
சீழ்பிடித்த மேனாட்டின்
சிந்தையிலா நிலைவேண்டாம்!
அன்பில் பிறந்து அன்பாய் வளந்த
பிள்ளைகளே!,

அன்னை தந்தையை அணைந்து வாழுங்கள்!

அணைத்து வாழுங்கள்!
கிள்ளைகள் யாவும், உறவு தன்னில்
கிளர்ந்து எழவேண்டும்!
மனிதனாய் வாழும் மரபு
காத்திட வேண்டும் இளையோரே!

பரிசுகள் என்ப பாசம் தானே
பணத்தால் வருவதல்ல!
சுற்றம் சூழ சொந்தங்களோடு
நட்பாய் வாழுங்கள்!
முதுமை என்னும் முகவரி கண்டபின்
திரும்பிப் பார்க்காதீர்!
தொலைத்தன வற்றைத்
தொலைவில் நின்றுத் தேடிப் பார்ப்பீரோ?

அன்பின் வழியது உயிர்நிலை
அறிந்து கொள்வீரே!
**கவிவளவன் 12-05-2019**



# அன்னையர் தினம்!

நிற்பன அன்றி,
மண்ணில் பிறந்த,
அத்துனை உயிர்க்கும்;
அன்னை என்றோர்,
அனுக்கம் உண்டு!

உயிர்ப்பித் தெழுந்து,
மண்ணில் தானாய்,
உணவைத் தேடும்,
உயிர்நிலைதனைப்
பெருவதுவரையில்,
அன்னையின் நிழலே;
அமுதம் அளிக்கும்!

ஆங்கு,
தந்தை என்றோர் தகுதி,
மானிடர்க்கு மட்டுமே
மண்ணில் உண்டு!

ஆண்வழிதானே,
அன்னையின் பெருமையை,
அவனியில் கூறும்!

ஆணின் பெருமை
அவனியில் ஏற்ற,
மகளாய்க்கூட,
பெண்டிர் தாமும்;
புறப்படுவதில்லை!
தந்தையர் தினத்தில்!
- கவிவளவன்

09-05-2021 (2.30 PM)